செ.வெ.எண்:25 நாள்:21.03.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்கவும், திட்டங்களை வகுக்கவும், குடும்பத்தினர் பற்றிய தொடர்ச்சியான ஆய்வு நடைபெறவுள்ளது. இந்த ஆய்வு, பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறையும், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS) மற்றும் அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் பல்கலை கழகமும் இணைந்து கூட்டு ஒத்துழைப்பில் மேற்கொள்கின்றன.

இந்த ஆய்வில் முதல் கட்டமாக அரியலூர் மாவட்டத்திலுள்ள தெறிவு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களின் மக்களின் வாழ்கை நிலை, வருவாய், பணி, வேலைவாய்ப்பு, சுகாதார அனுகுமுறை, கல்வி மற்றும் இடம் பெயர்ப்பு விவரங்களை தங்களிடம் கேட்கும்போது, துல்லிமான விவரங்களை வழங்க வேண்டும். மேலும் நாட்டின் வளர்ச்சியிலும், நாட்டு மக்களின் முன்னேற்றத்திலும் பங்கு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**